பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 22 சனிக்கிழமை 08.11.2025 கதிர் 363

**இனி இது ரகசியம் அல்ல!**

சுதந்திர இலங்கையின் 80ஆவது வரவு செலவுத் திட்டத்தை அரசுத் தலைவர் அநுரகுமார நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அவர் 04 மணி நேரம் 20 ☞2

# மாகாணத் தேர்தலை ஆளும்தரப்பு நடத்தாது

## மனோ கணேசன் கருத்து

மாகாண சபைத் தேர்தலை இந்த ஆளும்தரப்பு நடத்தாது என்றே தோன்றுகின்றது என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அரசுத் தலைவரின் வரவு செலவுத் திட்ட உரையை அடிப்படையாகக் கொண்டு அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட உரையில் ‘மாகாண சபைத் தேர்தல் பற்றியும் அரசுத் தலைவர் குறிப்பிட்டார். அவரது உரையை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபைத் தேர்தலை ஆளும்தரப்பு நடத்தாது என்றே தோன்றுகிறது. எல்லை நிர்ணய பிரச்சினை பற்றி அரசுத் தலைவர் பேசுகிறார். மீண்டும் எல்லை நிர்ணயத்துக்குச் சென்றால் தேர்தல் நடத்துவது தாமதமாகும்’ என்றார் அவர்.

மாகாணசபைத்தேர்தலைநடத்துவதைவிட புதிய அரசமைப்பை உருவாக்குவதில் ஆளும்தரப்பு அக்கறைகாட்டும் ☞2

# மாகாண சபைத் தேர்தலை நான் தீர்மானிக்க முடியாது

## அரசுத் தலைவர் தட்டிக்கழிப்பு

மாகாண சபைத் தேர்தலை எப்போது நடத்துவது என்பதை நான் தீர்மானிக்க முடியாது. அதற்கான பொறுப்பு நாடாளுமன்றத்திடமே உள்ளது. கட்சித் தலைவர்கள் இணைந்து சரியான தேர்தல் முறையை உருவாக்கித் தந்தால் நாம் தேர்தல் நடத்தத் தயார்.

நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்கள் இணைந்து சரியான தேர்தல் முறையை உருவாக்கித் தந்தால் நாம் தேர்தல் நடத்தத் தயாரென அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையை நிகழ்த்தும்போது எதிர்க் கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு சட்டம் ஒன்று உள்ளது எனினும் எல்லை நிர்ணய நடவடிக்கைகள் முடிவடையவில்லை. உங்களது ஆட்சிக் காலத்தில் எல்லை நிர்ணைய சட்டத்தை ☞2

# நாணய நிதியப் பிரதானி எழுதிய வரவு – செலவுத் திட்டமே வாசிப்பு

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் சாடல்

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானி எழுதிய வரவு - செலவுத் திட்டத்தையேஅரசுத்தலைவர்சபையில் வாசித்தார். ஆளும்தரப்பு சர்வதேச நாணயநிதியத்தின்பொம்மைபோன்று செயற்படுகிறது. 2026 ஆம் ஆண்டும் மக்கள் போலியான வாக்குறுதிகளால் ஏமாற்றமடைய போகிறார்கள். வரவு - செலவுத் திட்டத்தை மக்கள் முழுமையாக பரிசீலனை செய்ய வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுவெள்ளிக் கிழமை நடைபெற்ற 2026 நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரை தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நடுத்தர மக்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக் கப்படவில்லை.சமூகக்கட்டமைப்பில் ☞2

# வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள் நன்மை தரும் என்று நம்பவில்லை

## பொது ஜன பெரமுன கருத்து

வரவு - செலவு திட்ட உரையினூடாக அரசுத் தலைவர் வழங்கியுள்ள வாக்குறுதிகள் பொதுமக்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் என்பதில் எமக்கு நம்பிக்கையில்லையென பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் முதற்கொண்டு தேசிய மக்கள் சக்தியின் ஆளும்தரப்பில் உள்ள அனைவரும் பேச்சு திறமை உடையவர்கள் என்பது எமக்கு நன்றாகத் தெரியும். பேச்சு திறமையை போல அவர்களின் செயலும் இருக்கும் என கடந்த வரவு, செலவுத் திட்டத்தின் போதே எதிர்பார்த்தோம். எனினும் அவர்களின் செயல் திறனை இதுவரை காணவில்லை. ☞2

# பெரும் நிதி மோசடி குறித்து மைத்திரியிடம் விசாரணை

நல்லாட்சியின்போது அமைச்சு ஒன்றின் கீழ் இடம்பெற்ற பெரும் நிதி மோசடி தொடர்பில் முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நேற்று விசாரணை நடத்தியது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அழைப்பாணைக்கமைய நேற்று வியாழக்கிழமை காலை முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன இலஞ்ச ஊழல் விசாரணைஆணைக்குழுவில் முன்னியையாகியிருந்தார். ☞6

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பொருளாதார ரீதியில் முன்னேறமுடியாது

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாணாமல்பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் வருடாந்த சடங்கு மாத்திரமே என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத்தலைவரால் அளிக்கைசெய்யப்பட்ட 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஒரு சம்பிரதாய சடங்காகவே உள்ளது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் நாட்டின் முக்கிய பிரச்சினையான இனப் பிரச்சினை தொடர்பில் அரசுத் தலைவர் எந்த ஒரு தீர்வையும் முன்வைக்கவில்லை .

2025 ஆம் ஆண்டின் கொடுத்த வாக்குறுதிகள் தொடர்பில் அரசுத் தலைவர் ஏதும் சொல்லவில்லை. தமிழ் மக்களின் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் ☞2

# ஹெரோயின் விவகாரத்தில் சிக்கி கைதான அதிபரின் பணி பறிப்பு

அநுராதபுரத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட பாடசாலை அதிபரை பணி நிறுத்தம் செய்ய வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அனுராதபுரம் எப்பாவல பகுதியில் நவம்பர் 5 ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் பாடசாலை அதிபர் கைதுசெய்யப்பட்டார். ☞2

# நகைக் கடைக் கொள்ளையில் அரச பணியாளர் ஐவர் கைது

## அடையாள அணிவகுப்பின் பின்னர் மறியலில்

தங்க நகைக் கடைகளில் சட்டப்பூர்வ சோதனை நடத்துவதாகக் கூறி பணத்தைக் கொள்ளையடித்த வழக்கில் குற்றப் புலனாய்வுத் துறையால் கைது செய்யப்பட்ட மதுவரித் திணைக்கள அதிகாரி உள்ளிட்ட 5 பணியாளர்களையும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று உத்தரவிட்டார். இவர்கள் ஐவரும் 102 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பணத்தைக் கொள்ளையடித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கொழும்பு 11, ஹெட்டிவீதிய பகுதியில் உள்ள இரண்டு தங்க நகைக் கடைகளில் 2024 ஜூன் 5 அன்று சோதனை என்ற பெயரில் புகுந்தவர்கள் 10 கோடி ரூபாயைக் கொள்ளையடித்துச் ☞2

## இனி இது .....

நிமிடங்கள் தனது உரையை நிகழ்த்தினார். அவரது உரையில், நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மலையக மக்களுக்கான சம்பள உயர்வு குறித்த அறிவிப்புத் தவிர வேறெதுவும்சொல்லிக்கொள்ளும்படிஇல்லை. அவரது உரை எவ்வளவு சுவாரஸியமாக இருந்தது என்பதற்கு சிறந்த உதாரணமாக யாழ்ப்பாணத்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்தான் இருந்தார்.

அவர் வேறு யாருமல்லர் நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனாதான். அநுர உரையாற்றிக் கொண்டிருக்கும்போதே அருச்சுனா நல்ல தூக்கம். பல நாள்களாக ஐரோப்பிய நாடுகளில் இருந்துவிட்டு வந்த களைப்போ அல்லது அரசுத் தலைவரின் உரை தந்த அலுப்போ என்னவோ ஆள் நல்ல தூக்கம். வரவு செலவுத் திட்டத்தில் சுவாரஸியமே இல்லாத நிலையில் அருச்சுனாவின் தூக்கம்தான் நேற்று தெற்கு ஊடகங்களுக்குத் தீனி. அந்த சுகமான தூக்கத்தை பின்னணியில் அநுரவின் உரையுடன் அவை விரிவாக ஒளிப்பதிவு செய்து காணொலியாக வெளியிட்டிருந்தன.

அநுர பிற்பகல் 1.35 மணிக்கு பட்ஜெட் உரையைத் தொடங்கி மாலை 5.55 மணிக்கு முடித்தார். அங்கு நடந்த குறிப்பிடப்படும்படியான சில விடங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

அநுரவின் உரையைத் தொடர்ந்து, சம்பிரதாயபூர்வமாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசுத் தலைவருடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர், அதற்கு அநுர பதிலளித்தபோது சபையில் சிரிப்பலைகள் எழுந்தன.

பரவலாக்கப்பட்ட நிதிக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 10 மில்லியன் வழங்கப்படும் என்று அநுர அறிவித்தவுடன், முஜிபுர்ரஹ்மான், மனோகணேசன், ஹர்ஷன ராஜகருணா, தயாசிறி ஜெயசேகரா, பிரசாத் சிரவர்தன மற்றும் பலர் உட்பட பல எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 2025 ஆம் ஆண்டுக்கான பணம் பெறப்பட்டதா என்று விசாரித்தனர்.

இருப்பினும், 2026ஆம் ஆண்டில் அது நிச்சயமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் என்று அரசுத் தலைவர் கூறினார்.

மாகாண சபைத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கி இருப்பதாக அரசுத் தலைவர் அறிவித்ததால், மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரினர்.

மாகாண சபைத் தேர்தலை யார் ஒத்திவைத்தார்கள்? மாகாண சபைத் தேர்தலை வேண்டாம் என்று சொன்ன ஒரு உள்ளூராட்சி அமைச்சர் இருந்திருப்பார் என்று நினைக்கிறேன். இன்னும் ஒரு அமைச்சரும் இங்கு இருப்பார் என்று சொன்ன அநுர, எதிர்க்கட்சியை உன்னிப்பாகப் பார்த்தார், முன்னாள் அமைச்சர் அங்கே நிற்பதைக் கண்டார். அவரைப் பார்த்ததும் அரசுத் தலைவர் நக்கலாக ‘ஆ.... இது பைசர் முஸ்தபா’ என்றார். அவர் அப்படிச் சொன்னதும் முழு சபையும் சிரித்தது.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த முடியும் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியபோது, அரசுத் தலைவர், ‘பயப்பட வேண்டாம். மாகாண சபைத் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போதைய சட்டங்களின்படி தேர்தலை நடத்த முடியாது, எனவே தேர்தலை நடத்துவதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கவேண்டும் என்று பதிலளித்தார்.

உரைக்குப் பிறகு, மாலை 6.15 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சாப்பாட்டு அறையில் சம்பிரதாயபூர்வமான தேநீர் விருந்து தொடங்கியது.

அரசுத் தலைவர் வருவதற்கு முன்பு, தேநீர் விருந்துக்கு முதலில் வந்தவர்கள் சாமர சம்பத் தசநாயக்க மற்றும் திலித் ஜெயவீர ஆகியோரே. அவர்களே தேநீர் விருந்தைத் தொடக்கி வைத்திருந்தனர். சாமர சம்பத் தசநாயக்கவை உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அரசமைப்புச் சபையில் சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதியாக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனை அந்தப் பதவியில் இருந்து அகற்றும்படி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தவர் இவர்தான். இவரது கோரிக்கையை சபாநாயகர் நாடாளுமன்ற சிறப்புரிமைகள் குழுவிற்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

தேநீர்விருந்துக்கு அநுரகுமார வந்தவுடன், தூதர்கள் உட்பட ஏராளமான விருந்தினர்கள் வந்து அவரிடம் பேசினர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கை பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஆகியோர் தேநீர் விருந்துக்கு வரவில்லை என்றாலும், ரஞ்சித் மத்தும பண்டார, கயந்த கருணாதிலக, கபீர் ஹாஷிம், ஹர்ஷ டி சில்வா, ஜே.சி.அலவதுவல, தயாசிறி ஜெயசேகர, கிங்ஸ் நெல்சன், ரவி கருணாநாயக்க உள்ளிட்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேநீர் அருந்திக் கொண்டே அரசுத் தலைவருடன் சுமுகமாக உரையாடிக் கொண்டிருந்தனர். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில், ஹர்ஷ டி சில்வா மற்றும் கபீர் ஹாஷிம் ஆகியோர் அநுரவுடன் நீண்ட நேரம் பேசினர்.

‘சுவ செரிய’வை மாற்றக்கூடாது என்று ஹர்ஷ டி சில்வா கூறினார். தான் பயப்பட மாட்டேன் என்று அநுர புன்னகையுடன் கூறினார். பலர் வற் வரி செலுத்தக்கூடிய வகையில் அது திருத்தப்படக்கூடாது என்று கபீர் ஹாஷிம் கோரிக்கை விடுத்தார். அவர்கள் இருவரும் வரித் திருத்தம் தொடர்பாக அரசுத் தலைவருடன் நீண்ட நேரம் உரையாடியதைக் காண முடிந்தது.

அரசுத் தலைவர் வெளியேறத் தயாராக இருந்தபோது, அவர் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவைச் சந்தித்தார். சிரித்த முகத்துடன் ‘நாடாளுமன்றத்தில் ஏன் இவ்வளவு சத்தம்?‘ என்று அருச்சுனாவைப் பார்த்துக் கேட்டார். நெளிந்து வளைந்து சிரித்த அருச்சுனா அதற்குப் பதிலெதுவும் சொல்லவில்லை.

இதற்கிடையில், தேநீர் விருந்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் பிரியந்த வீரசூரியவும் அர்ச்சுனாவுடன் பேசினார். அப்போது தனக்குப் பாதுகாப்பு இல்லை என்று அருச்சுனா கவலைப்பட்டார். விலங்குகளிடமிருந்து பாதுகாப்புத் தேடப் பயன்படுத்தப்படும் மிளகாய் துப்பாக்கி ஒன்றையாவது தான் பயன்படுத்த அனுமதிக்கப்படவேண்டும் என்று அருச்சுனா அப்போது வலியுறுத்தினார். மிளகாய் துப்பாக்கி எல்லாம் வழங்க முடியாது, பாதுகாப்பான துப்பாக்கியைப் பெறுவது தொடர்பான பாதுகாப்புச் சபைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக பிரியந்த தன்னிடம் கூறினார் என்று அருச்சுனா பின்னர் பல நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தாராம்.

‘அவர்கள் எனக்கு ஒரு அசல் துப்பாக்கியை வழங்க முடிவு செய்துள்ளதாக கேள்விப்பட்டேன், ஆனால் எனக்கு அது பிடிக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் யாராவது என்னைச் சுட்டால், அதற்காகவும் நான்தான் பிடிபடுவேன்’ என்று அர்ச்சுனா அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறினாராம்.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அருச்சுனாவிடம் ‘வாள் இன்னும் காரில் இருக்கிறதா?’ என்று கேட்டாராம். ‘இப்போதைக்கு, நான் காரில் இருந்து வாளை அகற்றிவிட்டேன். இல்லையெனில், வாளை வைத்து என்னை கைது செய்திருப்பார்கள்’ என்று அருச்சுனா கூறியதைக் கேட்டு அங்கிருந்த அனைவரும் சிரித்தனர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரமடைந்துள்ள வறுமை, தொழிலின்மை ஆகிய பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

அரசுத் தலைவர் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திலும் பல வாக்குறுதிகளை வழங்கினார். ஆனால் அவற்றில் பெரும்பாலானவை நிறைவேற்றப்படவில்லை. தற்போது 2026 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திலும் பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளார். இவை மக்களை ஏமாற்றும் போலியானதொரு செயற்பாடு என்றே குறிப்பிடவேண்டும்.

பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்குவது பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. போலியான வாக்குறுதிகள் மாத்திரமே மிதமிஞ்சியதாகக் காணப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானி எழுதிய வரவு - செலவுத் திட்டத்தையே அரசுத் தலைவர் சபையில் வாசித்தார். ஆளும்தரப்பு சர்வதேச நாணய நிதியத்தின் பொம்மை போன்று செயற்படுகிறது.

போலியான வாக்குறுதிகளால் மக்களை ஏமாற்றி ஆளும்தரப்பு அதிகாரத்துக்கு வந்தது. மக்கள் பொருளாதார ரீதியில் இன்றும் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் பொய்யை தொடர்ந்து குறிப்பிட்டு அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளவே முயற்சிக்கிறது. வரவுசெலவுத்திட்டத்தை மக்கள் முழுமையாக பரிசீலனை செய்ய வேண்டும் என்றார்.

## நகைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றனர். இந்த வழக்கில் மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த கோப்ரல்கள் திலகரத்ன, கௌசல்யா, புபுது லக்மல் மற்றும் இன்ஸ்பெக்டர் திலோச்சனா ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முதல் மூன்று சந்தேகநபர்களுக்கான அடையாள அணிவகுப்பு வியாழக்கிழமை நடைபெற்றது. அவர்கள் மூவரும் அடையாளம் காணப்பட்டனர். ஏனைய இரண்டு சந்தேகநபர்களுக்கான அணிவகுப்பு நேற்று நீதிவான் அறையில் நடைபெற்றது. நான்காவது மற்றும் ஐந்தாவது சந்தேகநபர்களை நவம்பர் 13 வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் லஹிரு டி சில்வா உத்தரவிட்டார்.

இந்தச் சந்தேகநபர்கள் ஐவரும் ஒக்டோபர் 30 பிற்பகல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டனர் என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஹெரோயின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மக்கள் சக்தியின் பேலியகொடை நகரசபை உறுப்பினரின் கணவரான அவரது ஹோட்டலில் இருந்து ஒரு கிலோ கிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. இதையடுத்து அவரது மனைவி தனது பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார்.

இதையடுத்து வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் குறித்த அரச பாடசாலை அதிபரை பணி நிறுத்தம் செய்துள்ளார். சந்தேகநபரான அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில், அனுராதபுரம் குற்றப்புலனாய்வு பிரிவினரால் முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற் கொண்டும் தாபன விதிக்கோவையின் விதிகளின் கீழ் குற்றம் இழைக்கப்பட்டுள்ளமையாலும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிபரை பணி நிறுத்தம் செய்யப்படுகிறார் என அறிவித்துள்ளார்.

## வரவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை தேசிய மக்கள் சக்தி தற்போது வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்கிறது. வெங்காய விவசாயிகளின் வாழ்வாதாரத்தை சீர்குலைத்து வெளிநாட்டில் இருந்து அவற்றை கொள்வனவு செய்வதுடன் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை அனாதையாக்கி அவற்றையும் இறக்குமதி செய்கின்றனர்.

போதாக் குறைக்கு மீன்பிடி நடவடிக்கையையும் பாதிக்கும் வகையில் மீன்களையும் இறக்குமதி செய்கின்றனர். புலனாய்வு தகவலின்படி போதைப்பொருள் அடங்கிய 323 கொள்கலன்களைச் சுங்கத்திலிருந்து வெளியே கொண்டு செல்லவும் அனுமதியளித்துள்ளார்.

இந்த ஆளும்தரப்பு எம் மீது திருடர்கள் என பழிசுமத்தி விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைந்துள்ளது. போதைப்பொருள் கடத்தல் பின்னணியிலும் இவ்வாறே தெரிவித்தனர். ராஜபக்வின் ஆதரவாளர்கள், நாமலின் ஆதரவாளர்கள் எனக் கூறினார்கள் இறுதியில் கைது செய்யப்பட்டவர்கள் திசைக்காட்டியைச் சேர்ந்தவர்களே.

இந்த போதைப்பொருள் வர்த்தகத்தில் அரச பாடசாலை அதிபர் ஒருவருக்கு தொடர்புள்ளமையே பெரும் பிரச்சினையாக உள்ளது. நாட்டில் உள்ள பாடசாலை மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. போதைக்கு அடிமையான நபர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் பாடசாலை மாணவர்களின் சிந்தனையிலிருந்து இவ்வாறான எண்ணங்களை அகற்றுவதற்கான எந்தவொரு திட்டத்தையும் ஆளும்தரப்பு கொண்டு வரவில்லை.

அதிபர், ஆசிரியர்கள் ஊடக பாடசாலையினுள் போதைப்பொருளை கொண்டு செல்லும் வர்த்தகத்தை மறைக்கும் வகையில் ஆளும்தரப்பு செயல்படுகிறது. ஆகையால் ஆளும்தரப்பு உடனடியாக மாணவர்களின் எதிர்காலத்தையும் பெற்றோர்களின் நலனையும் கருதிச் செயற்படவேண்டும் என வலியுறுத்துகிறேன்.

போதைப்பொருளுக்கு எதிராக தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ள அரசுத் தலைவர் முதலில் தனது கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களை போதைப்பொருள் வர்த்தகத்தில் இருந்து விலகுமாறு அறிவுறுத்துவது அவசியம்.

அண்மையில் போதைப்பொருள் உள்ளதா என மாணவர்களின் பைகளை சோதனையிட்டனர். அதற்கு பதிலாக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் பைகளை சோதனை செய்திருக்கலாம். குற்றவாளிகளை பாதுகாப்பதற்கு ஒருபோதும் முயற்ச்சிக்கவேண்டாம் என்றார்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றியிருக்க முடியும். எனினும் நீங்கள் அதை செய்யவில்லை.

தயாசிறி ஜயசேகரவும் அப்போது அமைச்சராக இருந்தார். எல்லை நிர்ணய அறிக்கையை சமர்ப்பித்தபோது இந்த நாட்டில் முதலாவது தடவையாக அதனை சமர்ப்பித்த பைசர் முஸ்தபா அமைச்சரே அதற்கு எதிராகக் கையுயர்த்தினார். அமைச்சத் தானே கொண்டு வந்த அறிக்கையை தானே தோற்கடித்தார் என்பதே விந்தை.

இப்போது எம்மிடம் மாகாண சபைத் தேர்தலைக் கேட்கின்றனர். இப்போது சட்டத்தில் இடமில்லை. நான் சட்டமா அதிபரிடம் தேர்தலை நடத்தச் சட்டத்தில் காணப்படும் இடம் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு கேட்டுள்ளேன்.

விருப்பு வாக்கு தேர்தல் முறை வேண்டாம் என இங்கு சட்டம் நிறைவேற்றப்பட்டதை அனைவரும் நினைத்துப் பார்க்கவேண்டும். இந்த வரவு செலவுத் திட்டத்தில் நாம் 10 பில்லியன் ரூபாவை தேர்தலை நடத்துவதற்காக ஒதுக்கியுள்ளோம். தேர்தலை எப்போது நடத்துவது என்பதை நான் தீர்மானிக்க முடியாது.

அதற்கான பொறுப்பு நாடாளுமன்றத்திடமே உள்ளது. நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்கள் இணைந்து சரியான தேர்தல் முறையை உருவாக்கித் தந்தால் நாம் தேர்தல் நடத்தத் தயார்.

அத்துடன் இந்த வருடத்தில் தேர்தல் நடத்தும் எதிர்பார்ப்பிலேயே 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் வேண்டும் என்றார்.

## மாகாணத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அரசுத்தலைவர் தன்னிடம் தெரிவித்தார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

‘மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் அல்லது புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பணிகளை துரிதப்படுத்தி அதனூடாக வேணும் தீர்வை வழங்குங்கள் என்று அரசுத் தலைவரிடம் குறிப்பிட்டேன். அரசமைப்பை உருவாக்குவோம், உருவாக்குவோம் என்று அரசுத் தலைவர் குறிப்பிட்டார்’ என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## இனப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை என எந்த ஒரு விடயமும் இதில் உள்ளடக்கப்படவில்லை .

ஆசிய வங்கி உள்ளிட்ட வெளிநாட்டு வங்கிகளில் கடன் பெற்று அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்துச் செல்வதாக அரசுத் தலைவர் கூறுகின்றார் அவ்வாறு பெறும் கடன்களை எந்த வகையில் இவர்கள் அடைக்கப்போகின்றார்கள்? அதுவும் மக்களின் தலைகளில்தான் சுமத்தப்படும்.

வழமையாக ஒரு ஆளும்தரப்பு வருடாந்தம் கொண்டுவரும் ஒரு வரவு செலவுத் திட்ட சடங்காகவே இந்த வரவு செலவுத் திட்டமும் அமைந்துள்ளது அதாவது இது ஒரு வெற்று வரவுசெலவுத்திட்டமென்று தெரிகிறது என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24x7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உயிரைக் கொல்லும் லாப வேட்டை நிறுத்தப்படவேண்டும்

இலங்கை உலகளாவிய ஆடை உற்பத்தி மையங்களில் ஒன்றாக திகழ்கிறது. மேட் இன் சிறீலங்கா [Made in Sri Lanka] எனும் முத்திரை, உலகின் பல பிரபல ஆடை பிராண்டுகளின் லேபிள்களில் பெருமையாகப் பதிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த ஒவ்வொரு லேபிளின் பின்னாலும் ஒரு பெண் தொழிலாளியின் கண்ணீர், வலி, சுரண்டல், மற்றும் உயிரின் விலை மறைந்து கிடக்கிறது. சீத்தாவக்க பகுதியில் தனியார் ஆடைத் தொழிற்சாலையில்பணிபுரிந்தபுஷ்பலதாவின்உயிரிழப்பு, இச்சூழ்நிலையின் கொடூரமான உண்மையை மீண்டும் வெளிக்கொணர்கிறது.

புஷ்பலதா மயக்கம், மார்பு வலி, உடல்நலக் குறைபாடு போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தியபோதும், மேலாண்மை அவளைக் குணமடைய விடாமல் வேலையைத் தொடரச் செய்தது. தொழிற்சாலை நிர்வாகத்தின்அலட்சியத்தால்மருத்துவ உதவியும்தாமதமாகக்கிடைத்தது. உயிர் காக்கக்கூடிய ஒரு பெண் தொழிலாளி, உற்பத்தி இலக்கின் பேரில் உயிரிழந்துவிட்டார். இது தனிப்பட்ட ஒரு துயரச் சம்பவம் அல்ல; இலங்கையின் உற்பத்தித் துறையில் நிலவி வரும் ஆழ்ந்த அமைப்புசார் அநீதி மற்றும் சுரண்டலின் வெளிப்பாடாகும்.

### பெண்களைச் சுரண்டும் உற்பத்தி முறை

ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களில் பெரும்பாலோர் பெண்கள். அவர்களின் உழைப்பு, குடும்பத்திற்கான வருமானம் மட்டுமல்லாமல், நாட்டின் வெளிநாட்டு வருவாயின் முக்கியமான ஆதாரமாகவும் உள்ளது. எனினும், இத்தொழிலாளர்கள் இன்னும் மரியாதையற்ற சூழல்களில் வேலை செய்யத் தள்ளப்படுகிறார்கள். உடல் நலக்குறைவிலும் அவர்கள் பணியில் இருந்து விலக இயலாமல் அச்சுறுத்தப்படுகிறார்கள். மேலாளர்களின் அழுத்தம், அச்சம், ஒழுக்க நடவடிக்கைகள் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் மிரட்டல்கள் – இவை அனைத்தும் ஒரு நவீன தொழில்முறையின் முகமூடிக்குள் மறைந்த அடிமைத்தனமே.

### சட்டமும் நெறிமுறைகளும் மாயம்

இலங்கை தொழிலாளர் சட்டம், தொழிலாளர் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாயினும், அதன் நடைமுறைப் பின்பற்றல் பெரும்பாலான தனியார் தொழிற்சாலைகளில் தளர்வாகவே உள்ளது. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஒப்பந்தங்கள் 155 மற்றும் 29 ஆகியவை வேலை இடத்தில் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் சுரண்டல் தடுப்பு குறித்து உறுதிப்படுத்துகின்றன. ஆனால், புஷ்பலதாவின் சம்பவம் இவை அனைத்தும் புறக்கணிக்கப்பட்டதை வெளிப்படுத்துகிறது.

இந்த நிலையை ஆளும்தரப்புக்கள் நீண்டகாலமாகக் கவனிக்காமல் விட்டிருக்கின்றன. தொழிலாளர் துறையின் ஆய்வாளர்கள் மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் கடமையாற்றும் திறன் குறைவாக உள்ளது. தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படும்போது, அதற்கான தண்டனைகள் மெதுவாகவும் பலவீனமாகவும் அமைகின்றன. இதனால், நிறுவனங்கள் தங்கள் லாபத்திற்காக சட்டத்தை மீறிக் கொண்டே செல்வதற்கான துணிச்சலைப் பெற்றுள்ளன.

### உரிமையை உறுதி செய்யவேண்டும்

தொழிலாளர்கள் தங்கள் பணியிடத்தில் சுயாதீனமாக பேசவும், சங்கங்களை அமைக்கவும், தங்களுக்காகப் பேச்சு நடத்தவும் உரிமை பெற்றிருக்கவேண்டும். ஆனால், பலதொழிற்சாலைகள் தொழிற்சங்கங்களை ஒடுக்க முயல்கின்றன. சங்க உறுப்பினர்களை பணிநீக்கம் செய்தல், அச்சுறுத்தல், மற்றும் கறுப்புப் பட்டியலில் சேர்த்தல் போன்ற செயல்கள் வழக்கமாகின்றன. இதன் விளைவாக, தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பேணுவதற்கே அஞ்சுகின்றனர்.

ஒரு தொழிலாளர் தனது உடல்நலத்தை, உயிரைப் பணயம் வைத்து வேலை செய்ய வேண்டிய சூழல் எந்த நவீன சமூகத்திலும் ஏற்படக்கூடாது. தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் பொருளாதார முன்னேற்றத்தின் அடித்தளமாகக் கருதப்படவேண்டும். புஷ்பலதாவின் இறப்பு குறித்து உடனடியாக முழுமையான, வெளிப்படையான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். குற்றவாளிகள், அது தனிநபர்களாகவோ நிறுவனங்களாகவோ இருந்தாலும், கடுமையாகச் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். மேலும், அவரது குடும்பத்துக்கு நியாயமான இழப்பீடு வழங்கப்படல் வேண்டும்.

### மீண்டும் நிகழக்கூடாது

ஒரு நாட்டின் உண்மையான வளர்ச்சி அதன் தொழிலாளர்களின் நலனில் இருக்கிறது. புஷ்பலதா போன்ற தொழிலாளர்களின் உயிர் இழப்புகள், நம் பொருளாதார முறைமை மனிதாபிமானம் இழந்துவிட்டதைக் காட்டுகின்றன. ஒரு உற்பத்தி இலக்கிற்காக எந்த உயிரும் இழக்கப்படக்கூடாது. வேலை இடம் வெறும் உற்பத்தி மையம் அல்ல அது மனிதர்களின் வாழ்விடமும்கூட.

அதனால், அரசு, தொழில் அதிபர்கள், மற்றும் சர்வதேச பிராண்டுகள் அனைவரும் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்படவேண்டிய நேரம் இது. புஷ்பலதாவின் இறப்பு ஒரு எண்ணிக்கையல்ல; அது ஒரு எச்சரிக்கை. இனி எந்த தொழிலாளரும் தமது உயிரை இழக்காத ஒரு மனிதாபிமான உற்பத்தித்துறை உருவாகவேண்டும். அதுவே புஷ்பலதாவிற்கு வழங்கக்கூடிய உண்மையான நீதி ஆகும்.

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர் சாவிற்கு நீதி, இழப்பீடு வேண்டும்

## தொழிற்சங்கம் வலியுறுத்து

சீத்தாவக்க தனியார் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த புஷ்பலதாவின் இறப்புக்கான நீதி தாமதிக்கப்படாது வழங்கப்படுவதோடு உரிய இழப்பீடுகளும் அவரது குடும்பத்துக்கு கொடுக்கப்பட வேண்டுமென வணிக மற்றும் தொழிற்துறை தொழிலாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முன்பாக நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையில் இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புஷ்பலதா பணியாற்றிக்கொண்டிருந்தபோது, மயக்கம், மார்பு வலி மற்றும் பலவீனத்தால் அவதிப்பட்டதாக பலமுறை தெரிவித்திருந்தபோதிலும், ஒழுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற மிரட்டலின் கீழ் மேலாளர் அவரைத் தொடர்ந்து வேலை செய்ய உத்தரவிட்டார்.

மாலை 5 மணியளவில் அவர் தன் பணியிடத்தில் மயங்கி விழுந்தார்; ஆனால், பல மணி நேர தாமதத்திற்கு பிறகே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இரவு 11.15 மணியளவில் அவர் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டது. அவரின் இறப்பு முற்றிலும் தவிர்த்திருக்கக்கூடிய ஒன்றாகும்.

புஷ்பலதாவின் இறப்பு, உலகளாவிய ஆடை உற்பத்திச் சங்கிலியில் நிலவும் அமைப்பு சார்ந்த அலட்சியம் மற்றும் கட்டாயப்படுத்தல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. அங்கு பெரும்பாலானோர் பெண்கள்; அவர்கள் உடல்நலக் குறைவின்போதும் இயலாத உற்பத்தி இலக்குகளை அடைய வற்புறுத்தப்படுகிறார்கள்.

புஷ்பலதாவிற்கு மருத்துவ சிகிச்சை பெற அனுமதி மறுத்த குறித்த தனியார் நிறுவனம், இலங்கை தொழிலாளர் சட்டம், சர்வதேச தொழிலாளர் சட்ட ஒப்பந்தங்கள் 155 மற்றும் 29 ஆகியவற்றை மீறியதோடு, உயிர் மற்றும் வேலை இடத்திலான மரியாதைக்குரிய வாழ்வதற்கான அடிப்படை உரிமையையும் மீறியுள்ளது.

புஷ்பலதாவின் சக தொழிலாளர்களின் சாட்சிகள், குறித்த நிறுவனத்தில் நிலவும் அச்சம் மற்றும் தொந்தரவு நிறைந்த பணியிட கலாசாரத்தை வெளிப்படுத்துகின்றன. மேலாளர்கள் உற்பத்தி இலக்குகளை அடைய தொழிலாளர்களை அச்சுறுத்தி, துஸ்பிரயோகம் செய்து, சுரண்டுகின்றனர்.

தொழிலாளர்கள் மருத்துவ விடுமுறை, ஓய்விட இடைவேளைகள் மற்றும் பாதுகாப்பற்ற பணியிட நிபந்தனைகள் குறித்து பேசுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றில் இருந்து விலக்கப்படுகிறார்கள்.

புஷ்பலதா இறந்த நாளில் தொழிற்சாலையின் உள்ளே என்ன நடந்தது என்பதை வெளிப்படையாகச் சொல்லாமல் தொழிலாளர்களை மிரட்டும் நடவடிக்கைகளை அந்நிறுவனம் எடுத்து வருவதாக வாணிக மற்றும் தொழிற்துறை தொழிலாளர் சங்கத்திற்குத் தெரியவந்துள்ளது.

2022ஆம் ஆண்டு இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை மருத்துவமனையில் அனுமதிக்கத் தள்ளிய வாயு கசிவு சம்பவம், மேலும் 2020ஆம் ஆண்டு இலங்கையில் கொரோனா பரவலுக்கு காரணமான குறித்த நிறுவனத்தின் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட குழு தொற்றுகள் ஆகியவற்றின் போது, நிறுவனம் எடுத்த அலட்சியம் இதற்கு முன்னரே வெளிப்பட்டிருந்தது. புஷ்பலதாவின் இறப்பும் இதே பாணியில் இடம்பெற்ற மற்றொரு அலட்சியத்தின் விளைவாகும் இத்தொழில் பெண்களை உற்பத்தி தரத்தின் லாபத்திற்காக செலவிடக்கூடியவர்களாகக் காண்கிறது.

வணிக மற்றும் தொழிற்துறை தொழிலாளர் சங்கம், குறித்த நிறுவனத்தின் அலட்சியத்தை கண்டித்ததுடன், புஷ்பலதாவின் இறப்பிற்கு நிறுவனமும் அதிலிருந்து வெளியாகும் உற்பத்திகளும் பொறுப்பேற்குமாறு கோருகிறது. புஷ்பலதாவின் குடும்பத்தினருக்கு நியாயமான இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

தொழிலாளர்கள் தொழிற்சாலையின் உள்ளே தொழிற்சங்கங்களை அமைத்து, கூட்டாக பேச்சு நடத்தி, சுரண்டலான தொழில்துறை நடைமுறைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை பெற்றிருக்கவேண்டும். பல தசாப்தங்களாக இதை உறுதிசெய்யத் தவறிய இலங்கை அரசு, பிராண்டிக்ஸ் போன்ற நிறுவனங்களின் சுரண்டலான பணியிட சூழல்களில் இருந்து தொழிலாளர்களை பாதுகாக்க உடனடியாகத் தலையீடு செய்யவேண்டும்.

ஒரு உற்பத்தி இலக்கிற்காக எந்தத் தொழிலாளரும் இறக்கக்கூடாது. வேலை இடத்தில் ஆரோக்கியம், ஓய்வு மற்றும் மரியாதையுடன் வாழும் உரிமை என்பன தளர்த்த முடியாதவையாகும். புஷ்பலதாவிற்கு நீதி தாமதிக்கப்படவோ மறுக்கப்படவோகூடாது என்றும், அவரது இறப்பு இத்தொழில் தன்னை நிலைநிறுத்தும் பெண்களின் உழைப்பைச் சுரண்டாமல், அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு இருப்பதை உணரும் திருப்புமுனையாக அமைய வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

## சம்பளம் மட்டுமல்ல

# காணி, வீட்டுப் பிரச்சினைகளுக்கும் மலையக மக்களுக்குத் தீர்வு தேவை

## மனோ கணேசன் வலியுறுத்து

பெருந்தோட்ட மக்களின் சம்பளம் பற்றியே அரசுத் தலைவர் பேசினார். ஆனால் பெருந்தோட்ட மக்களின் காணி மற்றும் வீட்டுப் பிரச்சினை,கல்வி மற்றும் சுகாதாரம் பற்றி அரசுத் தலைவர் ஏதும் குறிப்பிடவில்லை. சம்பளப் பிரச்சினையில் மாத்திரம் கவனம் செலுத்த முடியாது. ஆகவே ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வினை முன்வைக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2026 நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரை தொடர்பில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவரால் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் சிறந்த பல விடயங்கள் காணப்படுகின்றன. அனைத்தையும் எதிர்க்கும் நிலையில் நாங்கள் இல்லை, சிறந்த திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சகல விடயங்களையும் ஆளும்தரப்பு செயற்படுத்த வேண்டும்.


அரசுத் தலைவர் தனது உரையில் மலையக மக்கள் என்று குறிப்பிட்டது வரவேற்கத்தக்கது. பெருந்தோட்ட மக்களின் சம்பளப் பிரச்சினை பற்றி குறிப்பிட்டார் . 200 ரூபாய் வழங்குவதற்கு 5000 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளாக குறிப்பிட்டார். நாடளாவிய ரீதியில் 1 இலட்சத்து 45 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளார்கள். அவ்வாறாயின் வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 8000 மில்லியன ரூபாவையேனும் ஒதுக்கியிருக்க வேண்டும்.

பெருந்தோட்ட மக்களின் சம்பளம் பற்றியே அரசுத் தலைவர் பேசினார். பெருந்தோட்ட மக்களின் காணி மற்றும் வீட்டுப் பிரச்சினை, கல்வி மற்றும் சுகாதாரம் பற்றி அரசுத் தலைவர் ஏதும் குறிப்பிடவில்லை. சம்பள பிரச்சினைக்கு மாத்திரம் கவனம் செலுத்த முடியாது. ஆகவே ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வினை முன்வைக்கவேண்டும் - என்றார்.

# சாணக்கியன் எம்.பியின் தந்தையார் காலமானார்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் தந்தையாரான வைத்தியர் இராஜபுத்திரன் இராசாமாணிக்கம் நேற்று பிற்பகல் இறைவனடி சேர்ந்தார்.

அவரது உடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பொரளை ஜயரத்ன மலர்சாலையில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை இறுதிக் கிரியைகள் முன்னெடுக்கப்பட்டு மாலை 6 மணியளவில் தகனம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



# முல்லை ஓய்வு நகர்
## Mullai Rest City

**எழுதுமட்டுவாழ் நகரில்**
**2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!**

*இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்



SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



**தொடர்புகளுக்கு: 0777 43 5557**

---

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City






### உள்ளக வசதிகள்
- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்

**0777 43 55 57**

## பெரும் நிதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட நேர விசாரணையின் பின்னர் பிற்பகல் அளவில் அவர் அங்கிருந்து வெளியேறியிருந்தார். தான் அரசுத் தலைவராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் அமைச்சு ஒன்றின் கீழ் இடம்பெற்ற நிதி மோசடித் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணை நடத்தியிருந்ததாக முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

விசாரணைகளின் பின்னர் வெளியேறிய அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் இன்று விசாரணைக்காக முன்னிலையாகியிருந்தேன். நல்லாட்சிக் காலத்தில் அரசுத் தலைவராகக் கடமையாற்றிய போது குறிப்பிட்ட அமைச்சு ஒன்றின் கீழ் இடம்பெற்றதாகக் கூறப்படும் பெரும் நிதி மோசடி தொடர்பாக விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

மேற்படி விசாரணைக்காக வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்யும் வகையில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தது. தேவையான தகவல்களை பெறுவதற்கு அதிகாரிகள் அழைப்பு விடுத்திருந்தனர்.

பிரதிவாதியாகவோ முறைப்பாட்டாளராகவோ இன்று விசாரணைக்கு சமூகமளிக்கவில்லை. கடந்த சில மாதங்களாக சிஐடி மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு விசாரணைக்காக வருகைத்தந்திருந்தேன். அது எனக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்காக அல்ல அரசுத் தலைவராக இருந்தபோது அரச நிறுவனங்கள் மற்றும் அமைச்சுகளில் இடம்பெற்ற மோசடி தொடர்பான விசாரணைகளுக்காகவே சமூகமளித்திருந்தேன்.

சட்ட விரோதமான செயல்கள் ஏதேனும் இடம் பெற்றிருப்பின் எமக்கு தெரிந்த விடயத்தை அதிகாரிகளிடம் வெளிப்படுத்த வேண்டும். பாதாள உலகக் குழு மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்தை ஒழிக்கும் ஆளும்தரப்பின் திட்டம் வரவேற்புக்குரியது.

பாதாள உலகக்குழு மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்குத் தூக்குத் தண்டனை வழங்கும் கடிதத்தில் கைச்சாத்திட்ட அரசுத் தலைவர் நானேதான். அத்தோடு நல்லாட்சியின் போதே முதலில் போதைப்பொருள் சட்ட ரீதியாகத் தீயிட்டு அழிக்கப்பட்டது.

எனது கடமைகளை முறையாக நிறைவேற்றியுள்ளேன். எனினும் அதற்குப் பின்னர் வந்த ஆளும்தரப்பிலிருந்த ஆட்சியாளர்கள் எனக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகளை முன்வைக்க ஆர்வத்துடன் செயற்பட்டனர் என்றார்.

# ஹெரோயின் நுகர்ந்த 3 இளைஞர்கள் கைது

*யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளை நுகர்ந்து கொண்டிருந்த மூன்று பேர் கையும் களவுமாக நேற்றுக் கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.*

*அவர்கள் போதைப்பொருளை நுகர்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட மருத்துவ ஊசி, ஹெரோயின் உள்ளிட்ட சில பொருட்களும் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*யாழ்ப்பாணம் பொலிஸ் போதைதடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் மஞ்சுள கருணாரத்ன தலைமையிலான குழுவினரின் சுற்றுக் காவல் நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்*

*நல்லூர் பகுதியைச் சேர்ந்த 30 வயதான இளைஞரும் அரியாலை பகுதியைச் சேர்ந்த 30 மற்றும் 32 வயதான இரண்டு இளைஞர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.*

*மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் கைதான சந்தேகநபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் மன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.*



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# JRIDE



இலங்கையின் பயணிகள் செயலி

SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA



5%

இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!